செ.வெ.எண் : 43/ ஆகஸ்ட் நாள் : 31.08.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் வட்டங்களுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் இன்று (31.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்க்கு நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களை நேரில் பார்வையிட்டர்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், செய்தியளர்களிடம் தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைள் தொடர்ந்து மேற்கொள்ளபட்டுவருகின்றன. செப்டம்பர் 1ம் தேதி முதல் கல்லூரிகள் மற்றும் 9 முதல் 12 வகுப்பு மாணாக்கருக்கு பள்ளிகள் திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு அனைத்து கல்வி நிலையங்களிலும் அரசு வழங்கியுள்ள கொரோனா தடுப்பு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளை திறக்கபடஉள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் மட்டும் 7000 - க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது வரை 96% ஆசிரியர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் சிறப்பு முகாம்களில் மீதம் உள்ள ஆசிரியர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு சராசரியாக 10,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் இதுவரை 45% மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துப்பட்டுள்ளது. 22 ஊராட்சிகள் 100% தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு 50% மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துப்பட்டுள்ளது. நகராட்சி, பஞ்சாயத்து, பேரூராட்சி மற்றும் ஊராட்சி உள்ள அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை டெல்டா வகை வைரஸ் பாதிப்பு கண்டறியப்படவில்லை. மழைகாலம் துவங்க உள்ளதை தொடர்ந்து டெங்கு வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுத்திடும் வகையில் சுற்றுப்புற தூய்மை பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சுகாதார துறை துணை இயக்குநர் மரு.ஐ. ரவிந்திரன், இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) திரு.நிலேஸ்வர் உட்பட அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**